செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி ௨

இல: 1041 1970 மே 29 வெள்ளிக்கிழமை ★ விலை சதம்

RECEIVED
'92 -7- - 8
Periodicals Division
Library

# ஸ்ரீமா இன்று பிரதமராக பதவி ஏற்பு

**ஏழாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற கூட்டணிக் கட்சிகளின் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்து கொள்கிறார்.**

தேர்தலில் தோற்ற திரு. டட்லி சேனநாயக்கா தனது ராஜினுமாவையும், தனது மந்திரிசபையின் ராஜினுமாவையும் நேற்றுப் பகல் மகாதேசாதிபதியிடம் சமர்ப்பித்ததை அடுத்து புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும்படி திருமதி பண்டாரநாயக்காவை மகாதேசாதிபதி கேட்டுள்ளார்.

பத்து வருடங்களுக்கு முன்னர் இலங்கையின் பிரதமராக ஒரு முறை தெரிவு செய்யப்பட்டு அதன் மூலம் உலகிலேயே முதல் பெண் பிரதமர் என்னும் புகழைப் பெற்ற திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இம் முறை அமோக வெற்றியுடன் சுதந்திர இலங்கையின் எட்டாவது பிரதமராகப் பதவி ஏற்றுக் கொள்கிறார்.

முன்னர் பிரதமராக இருந்த காலத்தில் திருமதி பண்டாரநாயக்கா மக்கள் பிரதிநிதிகள் சபையில் அங்கம் வகிக்கவில்லை. மூதவை உறுப்பினராக இருந்தபடியே பிரதமராகக் கடமையாற்றினர். ஆனல் இம்முறையோ மக்களின் பிரதிநிதியாக அவர் நாடாளுமன்றத்தில் இருந்தவாறே பிரதமராக ஆட்சி செலுத்தவிருக்கிறார்.

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அமைத்த போது நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவியாக இருந்து அரிய சேவையாற்றினர் ஸ்ரீமாவோ. இதன் மூலம் உலகிலேயே எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை வகித்த முதல் பெண்மணி என்ற பெருமையும் அவருக்கு கிடைத்தது.

இலங்கை அரசியல் வரலாற்றிலேயே முதல் தடவையாக பெரும்பான்மை ஸ்தானங்களுடன் பதவிக்கு வரும் அரசாங்கம் இதுவேயாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி கடந்த 1956-ம் ஆண்டு அடைந்த தோல்வியிலும் பார்க்க இம் முறை படு தோல்வி அடைந்துள்ளது. (ம)

## வெற்றிக்களிப்பில் திளைத்திருக்கும் ஸ்ரீமா



## மீனாட்சி



மக்கள் சக்தி திரண்டு எழுந்தால் மாநிலமே கதிகலங்கும் என்று தெரியாமலே சொன்னார்கள்!

## ஒரே நோக்கில் கட்சி நிலைமை

| | |
|---|---|
| சுதந்திரா | —90 |
| ல. ச. ச. க. | —19 |
| ஐ. தே. க. | —17 |
| தமிழரசு | —13 |
| கம்யூனிஸ்ட் | —06 |
| த. காங்கிரஸ் | —03 |
| சுயேச்சை | —02 |

## மறைந்தார்

கொழும்பு, மே. 29

கொழும்பு வாக்களிப்பு நிலையம் ஒன்றில் கடமையாற்றிய ஒரு காவலர் வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர்களுக்கு உணவு வாங்குவதற்காக தேர்தல் அதிகாரி கொடுத்த பணத்துடன் தம்பி நீட்டிவிட்டாராம்.

பின்னர் அந்த தேர்தல் அதிகாரி ஒரு பொலீஸ் உத்தியோகத்தரை அனுப்பி உணவைப் பெற்றுக் கொண்டார். (ண)

## பஸ்களில் ஸ்ரீமாவோ படங்கள்

கொழும்பு. மே. 29

நாட்டின் பல பாகங்களிலும் நேற்று ஓடிய பஸ்களில் நேற்று அதி[illegible]ந்தே திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் படங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

இவைகள் பெரும்பாலும் வண்[illegible]களாகவும் இருந்தன, பெரும்பாலான பஸ்களில் திருமதி ஸ்ரீமாவோவின் படத்துடன் காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர் டி. பண்டாரநாயக்காவின் படங்களும் ஒட்டப்பட்டிருந்தன. (ண)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவில் இப் படியும் உண்டாம்:

# நிர்வாண கோலத்தில் நடனமாடுகிறார்களாம்

### ஆடை களைந்தாடும் ஆரணங்குகளுக்கு எதிர்ப்பு

கல்கத்தா, மே 24

கல்கத்தா இரவு விடுதிகளில் "காபரே" நடனம் ஆடும் பல நடனக்காரிகள், ஆடை கழற்றும் நடனமான "ஸ்டிரிப் டீசுக்குத்" தடை விதிக்க வேண்டுமென விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

"காபரே" நடனம் என்பது இடுப்பை அசைத்து ஆடும் கவர்ச்சி நடனமாகும். இதற்குத் தனி திறமை தேவை. ஆனல், "ஸ்டிரிப் ஸ்டீஸ்" என்னும் ஆடை கழற்றும் நடனத்துக்குத் திறமையேதும் தேவை இல்லை.

சபை நடுவே, அச்சம், மடம், பயிர்ப்பு யாவும் துறந்து, ஒவ்வொரு ஆடையாகக் களைந்தெறிந்து நிர்வாணமாக நிற்க முன் வந்தால் போதும். எனவே, திறமையின் மதிப்பைக் குறைக்கும் "ஸ்டிரிப் ஸ்டீஸ்" ஆபாச நடனத்துக்குத் தடை விதிக்க வேண்டும் என்று கல்கத்தா நடனக்காரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

"ஸ்டிரிப் ஸ்டீஸ்" நடனத்துக்கு சென்னையிலும், கல்கத்தாவிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந் நகரங்களில், "காபரே" ஆடுபவர்களுக்குக் கூட, சில கட்டுப்பாட்டு நெறி முறைகள் விதிக்கப் பட்டுள்ளன.

இதை ஆடுபவர்கள், லைசென்சு பெற்றிருக்க வேண்டும். உடை விஷயத்திலும் சில சட்ட திட்டங்களைப் பின்பற்ற வேண்டும். தங்கள் நடனத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் ரசிகர்கள் அருகில் செல்லாமல், தூரத்தில் நின்றே ஆட வேண்டும்.

ஆனல் பெங்களூர், பம்பாய் போன்ற நகரங்களில், "காபரே" என்ற பெயரில் மிகவும் ஆபாசமான நடனங்கள் நடைபெறுகின்றன.

அங்குள்ள இரவு விடுதிகளில் ஆடும் பெண்கள், ஒளி விளக்கின் முன்னே நிர்வாணமாக ஆடுகின்றனர். நடனம் என்பதற்கே அர்த்தமின்றி சில ஆபாச சைகைகளைக் காட்டுகின்றனர் என்று இரு கல்கத்தா நடனக்காரிகள் தெரிவித்தனர்.

"இன்னும் சில ஹோட்டல்களில் வெறுமனே குதித்து ஆட்டம் போட்டு, ரசிகர்களுடன் ஒட்டி உரசி நடனமிடும் ஆட்டக்காரிகளெல்லாம் மாதத்திற்கு ரூ. 400 சம்பளம் பெறுகின்றனர்" என்று அவர்கள் தெரிவித்தனர்.

"ஸ்டிரிப் ஸ்டீஸ்" நடனம் இந்தியப் பண்பாட்டிற்கே முரணானது என்று அவர்கள் கூறினர். திரைப் படங்களில் முத்தக் காட்சிகளைக் காட்டலாம் என்று கோஸ்லா கமிட்டி சிபாரிசு செய்ததற்கு எத்தனை எதிர்ப்புகள் எழுந்தன.

ஆனல் அதைவிட ஆபாசமான நடனங்கள், எந்த வித முணுமுணுப்புமின்றி, நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று அந்த நடனக்காரிகள் கூறினர்.

கல்கத்தாவில் "காபரே" நடனம் ஆடுவதில் தலை சிறந்த ஒரு பெண்ணை அணுகி, மண வாழ்க்கை நடத்துவதில் விருப்பம் உண்டா என்று கேட்டபொழுது, "என்ன தான் ஆனலும் நானும் ஒரு பெண். எனக்கும் திருமண ஆசை உண்டு. நான் நல்லபடி திருமணம் செய்து கொண்டால் இந்தத் தொழிலை விட்டே விலகி விடுவேன்" என்று உணர்ச்சியுடன் கூறினர். (ண)

## பழிவாங்கும் உணர்வே

### காதல் கொலைகளுக்கு காரணமாம்

சென்னை, மே 28

தமிழ் நாட்டில் கடந்த 10 ஆண்டு காலமாக பொலீஸார் புலன் விசாரணை செய்த காதல் தகராறு கொலை வழக்குகளுக்கு, கோபம், வெறுப்புணர்ச்சி, பழிக்குப் பழி ஆகியவையே மூலகாரணமாக இருந்துள்ளன.

பல கொலை வழக்குகளில், மனைவி நெறி தவறி நடந்ததினல் ஆத்திரமடைந்து கணவன் அவளை கொலை செய்திருக்கிறன்.

திருச்சி மாவட்டத்தில் நடந்த ஒரு கொலை வழக்கில் கிராம சேவகர் ஒருவரிடம் பணியாளாக இருந்த நபரின் மனைவி தீராத காமவெறி கொண்டிருந்தாள் என்று அவளைத் தீர்த்துக் கட்டுவதற்கு கிராம சேவகரும் அந்த நபரும் சதித் திட்டம் தீட்டினர்.

ஒரு நாள் இரவு அந்த நபர் தமது மனைவியை இரவுக் காட்சி சினிமாவுக்கு அழைத்துச் செல்வதாக ஏமாற்றி ஆற்றோரத்திற்கு அழைத்துச் சென்றன். அங்கு அவள் தலையை வெட்டி எறிந்து கண்ட துண்டமான உடலை மணலில் புதைத்து விட்டான்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தில் தன் மனைவி தனது தம்பியுடன் தகாத உறவு கொண்டிருப்பதாகச் சந்தேகித்த கணவன், அவளைக் கொலை செய்திருக்கிறன்.

தங்களது கடைசி குழந்தை தனக்குப் பிறந்ததே அல்ல என்ற சந்தேகத்தினல், அவன் கோபம் அடைந்து, தனது மனைவியின் தலையை அரிவாளால் வெட்டி எறிந்தான்.

அத்துடன், அந்தப் பச்சிளங் குழந்தை உட்பட தன் 3 குழந்தைகளையும் அவன் கொன்று போட்டான்.

சென்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு, கோவை மாவட்டத்தில் நிகழ்ந்த மற்றொரு சம்பவத்தில் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சித் தொண்டர் ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

ஈரோடு – மேட்டூர் சாலையில், அவரது தலையற்ற முண்டம் கிடந்தது. அரசியல் தகராறு காரணமாக அந்தக் கொலை நிகழ்ந்திருக்கலாமென பொலீஸார் சந்தேகித்தனர்.

ஆனல் பின்னர் புலன் விசாரணை செய்தபோது, அதுவும் காதல் தகராறு கொலைதான் என்று தெரிய வந்தது. கொலையுண்டவரின் மனைவியுடன் முருகன் என்னும் நெசவுத் தொழிலாளி தகாத உறவு கொண்டிருந்தான். இதை பற்றி கொலையுண்டவர் சந்தேகப்பட்ட போது, அவரது மனைவியும் அந்த நெசவுத் தொழிலாளியும் சேர்ந்து அவரைத் தீர்த்துக் கட்டி விட்டனர்.

நெல்லை மாவட்டத்தில் மற்றொரு கோரமான கொலை வழக்கு நடந்தது. மனைவியை இழந்த ஆசாமி ஒருவன், தனது காதல் களியாட்டங்களுக்கு எந்த விதமான இடையூறும் இல்லாமல் இருப்பதற்காகத் தனது 4 மகள்களையும் கிணற்றில் தள்ளிக் கொலை செய்தான். (ண)

## இறக்கும் முன்னர் இதயத்தை வெளியே எடுத்ததாக வழக்கு

வெர்ஜீனியா, அமெரிக்கா, மே 28

இறந்து போன மனிதரின் இதயத்தை எடுத்து உயிருள்ள நோயாளிக்குப் பொருத்தும் மாற்று இதய சிகிச்சைகள்" நடந்து வருவது தெரிந்ததே.

ஆனல், தமது சகோதரன் இறப்பதற்கு முன்னலேயே அவரது இதயத்தை எடுத்து இன்னெருவருக்குப் பொருத்தி விட்டதாக அமெரிக்காவில் ஒருவர் வழக்கு தொடர்ந்துள்ளார்.

வெர்ஜீனியா மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர்கள் குழுவினர், 1968-ம் ஆண்டு மே 26-ந் தேதி ஜோசப் ஜி. கிளீட் என்பவருக்கு மாற்று இதய அறுவைச் சிகிச்சை நடத்தினர். ப்ரூஸ் ஓ. டக்கர் என்னும் நீக்ரோ ஒருவரின் இதயத்தை எடுத்து அவருக்குப் பொருத்தினர்.

ஆனல் டக்கர் இறப்பதற்கு முன்னலேயே அவர் இறந்து விட்டதாகத் தவருகக் கூறி, அவரது இதயத்தை எடுத்து கிளீட்டுக்குப் பொருத்தி விட்டதாக டக்கரின் தம்பி இப்பொழுது வழக்குத் தொடர்ந்துள்ளார். இதற்காக, அவர் ஒரு மில்லியன் டாலர் (75 லட்சம் ரூபாய்) நஷ்டஈடு கோரியுள்ளார். (ண)

### நல்வாழ்வு தருமாக!

அடுத்த ஐந்தாண்டுகளுக்கு எத்தகைய அரசு தமக்கு வேண்டும் என்பதை மக்கள் அழுத்தம் திருத்தமாகத் தீர்மானித்து விட்டார்கள். எனவே தேசத்திற்குப் புதிய அரசும் புதிய முதல் அமைச்சரும் கிடைத்துவிட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பரிபூரணமான பெரும்பான்மை அளிக்கப்பட்டுள்ளது. எனவே அது புதிய அரசை அமைத்து மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முற்படும். மக்கள் தங்கள் கடமையைச் செய்து விட்டார்கள். அதே போன்று அரசிடம் அவர்கள் சமாதான வாழ்வையும் முன்னேற்றத்தையும் தங்களுக்கு எதிர்பார்க்கின்றார்கள். புதிய அரசு ஜனநாயக பாரம்பரியங்களைப் பாதுகாத்துப் பேணி வரும் என்றே நாம் நிச்சயமாக நம்புகின்றோம். மக்களின் பரிபூரண ஆதரவுண்டு; புதிய அரசு தன் கடமையைச் செய்து நல்வாழ்வை மக்களுக்கு தருமாக.

**தந்தி**


### ஜெர்மனி அப்பியாச

கல்லூரிக்கு 16—18 வயதுடைய கனிஷ்டம் சித்தியடைந்தவர்களிடம் இருந்து ஜூன் 5 வரை விண்ணப்பப் பத்திரங்கள் கோரப் படுகின்றன. விபரங்களுக்கும், விண்ணப்பப் பத்திரங்களுக்கும் உடனே எழுதுங்கள்.

CENTRAL SUPPLIERS
DEHIWELA

**தந்தி**
**சிறு விளம்பரங்கள்**

**வசியம்**

காதலில் வெற்றியை எதிர் பார்ப்பவர்களுக்கு தவறாத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய, ஊருப்பொலை.

R- 65012

## எலிக்ஸைரன்

(மேகரோக நிவாரண தாதுவிருத்தி தரக்கூடியது)

மேகரோகம், வீரிய நஷ்டம், மூத்திரத்துடன் இந்திரியம் நீத்துப் போதல், ஸ்திரிகளை மனதில் நினைத்தாலும், பார்த்தாலும், தொட்டாலும் உடனே இந்திரியம் ஸ்கலிதமாகிவிடுதல், ஸ்வப்பன ஸ்கலிதம், மலச்சிக்கல், வெள்ளை வெட்டை, பித்த மயக்கம், ஆண்மைக் குறைவு, ஸ்திரீயினுடைய இச்சையை பூர்த்தியாகத் தணிக்க முடியாமலும், ஸ்திரீயிடம் நெருங்கிய மாத்திரத்திலேயே இந்திரியம் வெளிப்படுதல் முதலிய ரோகங்களைக் குணப்படுத்தி, இரத்த சுத்தி — விருத்தி செய்து தசை வளர்ச்சியையும், இராஜ உறுப்புகளுக்கு முறுக்கேற்றுவதிலும் முதன்மை பெற்ற ஔஷதம்.

ஒரு டின் விலை ரூ. 6-00. (தபால் செலவுடன்)
போஸ்டல் ஓடர் அனுப்பிப் பெறவும்.

**நவலட்சுமி புத்தகசாலை**
**136, செட்டியார் தெரு,**
**கொழும்பு-11.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — புதிய எம். பிக்கள் —

நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை நாடாளுமன்றத்தின் ஏழாவது பொத்துத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமோக வெற்றியீட்டியது. ஐ. தே. கட்சி பெரும் தோல்வி அடைந்தது.

நாடாளுமன்றத்தின் புதிய பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளோர் விபரம் வருமாறு:—

**கொழும்பு வடக்கு – 1**
வீ. ஏ. சுகததாசா (ஐ. தே. க.)

**கொழும்பு மத்தி – 2**
[3 அங்கத்தவர் தொகுதி]
ஆர். பிரேமதாசா (ஐ. தே. க.)
பளீல் கபூர் (ஐ. தே. க.)
பீட்டர் கெனமன் (கு. க.)

**பொரளை – 3**
குசலா அபயவர்த்தன (ல. ச. ச. க.)

**கொழும்பு தெற்கு – 4**
[2 அங்கத்தவர் தொகுதி]
ஜே. ஆர். ஜயவர்த்தன (ஐ. தே. க.)
பேர்னுட் சொய்ஸா (ல. ச. ச. க.)

**வத்தளை – 5**
ஏ. டி. ஜே. எல். லியோ (ஸ்ரீ. ல. சு. க.)

**நீர்கொழும்பு – 6**
டென்ஸில் பெர்னண்டோ (ஐ. தே. க.)

**கட்டானை – 7**
சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட திரு. ரஞ்சன் பெர்னண்டோபுள்ளே காலமானதைத் தொடர்ந்து கட்டான தொகுதிக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**திவுலுப்பிட்டிய – 8**
லக்ஷ்மன் ஜயக்கொடி (ஸ்ரீ. ல. சு. க)

**மீரிகம – 9**
திருமதி எஸ். ஒபயசேகரா (ஸ்ரீ. ல. சு. க.)

**மினுவாங்கொடை – 10**
எம். பி. டீ இஸட். சிறிவர்த்தன (ஸ்ரீ. ல. சு. க)

**அத்தனகலை – 11**
ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா (ஸ்ரீ. ல. சு. க.)

**கம்பாஹா – 12**
ஏ. ரி. புஸநாயக்கா (ஸ்ரீ. ல. சு. க.)

**ஜா-எல – 13**
பாரிஸ் பெரேரா (ஐ. தே. க.)

**மஹர – 14**
எஸ். கே. கே. சூரியாராச்சி (ஸ்ரீ. ல. சு. க.)

**தொம்பே – 15**
பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா (ஸ்ரீ. ல. சு. க.)

**களனி – 16**
ஆர். எஸ். பெரேரா (ஸ்ரீ. ல. சு. க.)

**கொலன்னாவ – 16**
ரி. பி. இலங்கரத்ன (ஸ்ரீ. ல. சு. க.)

**கோட்டே – 18**
ஸ்ரான்லி திலகரத்ன (ஸ்ரீ. ல. சு. க.)

**தெஹிவளை கல்கிசை – 19**
விவியன் குணவர்த்தன (ல. ச. ச. க.)

**மொரட்டுவை – 20**
விமலசிறீ டீ மெல் (ல. ச. ச. க.)

**கெஸ்பாவ – 21**
சோமவீர சந்திரசிறீ (ஸ்ரீ. ல. சு. க.)

**கொட்டாவ – 22**
சந்திரபால குணசேகரா (ல. ச. ச. க.)

**ஹோமகம – 23**
வில்பிரட் சேனநாயக்கா (ல. ச. ச. க.)

**அவிசாவளை – 24**
பி. ஜயசூரியா (ஸ்ரீ. ல. சு. க.)

**ஹொரண – 25**
ஆர். விக்கிரமநாயக்கா (ஸ்ரீ. ல. சு. க.)

**புலத்சிங்கள – 26**
மங்குள முனசிங்கா (ல. ச. ச. க.)

**பண்டாரகம – 27**
எச். விக்கிரமசிங்காக (ஸ்ரீ. ல. சு. க.)

**பாணந்துறை – 28**
லெஸ்லி குணவர்த்தன (ல. ச. ச. க)

**களுத்துறை – 29**
சம்லி குணவர்த்தன (ல. ச. ச. க.)

**பேருவலை – 30**
ஐ. ஏ. அப்துல் காதர் (ஸ்ரீ. ல. சு. க.)

**மத்துகம – 31**
தயாசேன பாஸ்குவல் (ஸ்ரீ. ல. சு. க.)

**அகலவத்தை – 32**
கொல்வின் ஆர். டீ சில்வா (ல. ச. ச. க.)

**தம்புல்ல – 33**
ரி. பி. தென்னக்கூன் (ஸ்ரீ. ல. சு. க.)

**லக்கல – 34**
எம். சி. தோபல்லாவ (ஸ்ரீ. ல. சு. க.)

**மாத்தளை – 35**
ரிச்சார்ட் உடுகம (ஸ்ரீ. ல. சு. க.)

**ரத்தோட்டை – 36**
எஸ். பி. யாலேகம (ஸ்ரீ. ல. சு. க.)

**வத்தேகம – 37**
ஏ. ஜி. பெர்னண்டோ (ஸ்ரீ. ல. சு. க.)

**அக்குறணை – 38**
[2 அங்கத்தவர் தொகுதி]
ஏ. சி. எஸ். ஹமீத் (ஐ. தே. க.)
டி. ஜி. எச். சிறிசேன (ஸ்ரீ. ல. சு. க.)

**கலகெதர – 39**
தாமரகுமாரி இலங்கரத்ன (ஸ்ரீ. ல. சு. க.)

**யட்டிநுவர – 40**
எச். கொபேகத்துவ. (ஸ்ரீ. ல. சு. க.)

**உடுனுவர – 41**
ரி. பி. ஜயசுந்தரா (ஸ்ரீ. ல. சு. க.)

**கண்டி – 42**
ஈ. எல். சேனநாயக்கா (ஐ. தே. க.)

**செங்கடகல – 43**
என். விமலசேன (ஐ. தே. க.)

**குண்டசாலை – 44**
யூ. பி. வை. ஜினதாசா (ஸ்ரீ. ல. சு. க.)

**தெல்தெனிய – 45**
ஆர். குலத்திலகா (ஸ்ரீ. ல. சு. க.)

**மினிப்பே – 46**
எச். எம். நவரத்ன (ஸ்ரீ. ல. சு. க.)

**வலப்பனை – 47**
ரி. பி. எம். ஹேரத் (ஸ்ரீ. ல. சு. க.)

**ஹிங்குரன்கெட்ட – 48**
பி. பி. உனந்தென்ன (ஸ்ரீ. ல. சு. க.)

**ஹேவாஹெட்ட – 49**
பியசேன தென்னக்கூன் (ஸ்ரீ. ல. சு. க.)

**கம்பளை – 50**
டி. எம். ஜயரத்ன (ஸ்ரீ. ல. சு. க.)

**நாவலப்பிட்டி – 51**
எம். எஸ். அலுத்கமகே (ஸ்ரீ. ல. சு. க.)

**கொத்மலே – 52**
ஜே. டி. வீரசேகரா (ஸ்ரீ. ல. சு. க.)

**நுவரெலியா – 53**
காமினி திஸ்ஸாநாயக்கா (ஐ. தே. க.)

**மஸ்கெலியா – 54**
ஜீ. பி. ஆரியதிலக (ஸ்ரீ. ல. சு. க.)

**பலப்பிட்டியா – 55**
டபிள்யூ பி. டி. சில்வா (ல. ச. ச. க.)

**அம்பலாங்கொடை – 56**
எல். சி. டி. சில்வா (ல. ச. ச. க.)

**பெந்தர எல்பிட்டிய – 57**
அல்பேட் காரியவாசம் (ஸ்ரீ. ல. சு. க)

**ஹினிதும – 58**
டபிள்யூ. எச். திஸ்ஸநாயக்க (ஸ்ரீ. ல. சு. க)

**பத்தேகம – 59**
நீல் டி அல்விஸ் (ல. ச. ச. க.)

**ரத்கம – 60**
எம். ஜி. மெண்டிஸ் (க. கு.)

**அக்மீமன – 61**
எஸ். சமரசேகரா (ஸ்ரீ. ல. சு. க.)

**காலி – 62**
விஜயானந்த தஹநாயக்கா (ஐ. தே. க.)

**ஹபராதுவ – 63**
பிறின்ஸ் குணசேகரா (ஸ்ரீ. ல. சு. க)

**வெலிகம – 64**
சி. பி. இலங்கக்கோன் (ஸ்ரீ. ல. சு. க)

**அக்குரஸ்ஸ – 65**
எஸ். ஏ. விக்ரமசிங்கா (கு. க.)

**தெனியாய – 66**
எஸ். தஹநாயக்கா (ல. ச. ச. க.)

**ஹக்மன – 67**
டி. ஆர். ராஜபக்ச (ஸ்ரீ. ல. சு. க.)

**கம்புறுப்பிட்டியா – 68**
எம். ஏ. நாணயக்காரா (கு. க.)

**மாத்தறை – 69**
பி. வை துடாவை (க. கு.)

**தெவிநுவர – 70**
ஆர். டி. மெல் (ஸ்ரீ. ல. சு. க.)

**பெலியத்த – 71**
எம். ராஜபக்ச (ஸ்ரீ. ல. சு. க.)

**முல்கிரிகல – 72**
ஜோர்ஜ் ராஜபக்ச (ஸ்ரீ. ல. சு. க.)

**திஸ்ஸமகாரகம – 73**
ரீ. எதிரிசூரியா (ஸ்ரீ. ல. சு. க.)

**ஊர்காவற்றுறை – 74**
கே. பி. இரத்தினம் (த. அ. க.)

**வட்டுக்கோட்டை – 75**
ஏ. தியாகராஜா (த. கா.)

**காங்கேசன்துறை – 76**
எஸ். ஜே. வி. செல்வநாயகம் (த. அ. க.)

**உடுவில் – 77**
வி. தர்மலிங்கம் (த. அ. க.)

**யாழ்ப்பாணம் – 78**
சி. எக்ஸ். மார்ட்டின் (த. அ. க.)

**நல்லூர் – 79**
சி. அருளம்பலம் (த. கா.)

**கோப்பாய் – 80**
எஸ். கதிரவேற்பிள்ளை (த. அ. க.)

**உடுப்பிட்டி – 81**
கே. ஜெயக்கொடி (த. அ. க.)

**பருத்தித்துறை – 82**
கே. துரைரத்தினம் (த. அ. க.)

**சாவகச்சேரி – 83**
வி. என். நவரத்தினம் (த. அ. க.)

**கிளிநொச்சி – 84**
வி. ஆனந்தசங்கரி (த. கா.)

**மன்னார் – 85**
வி. ஏ. அழகக்கோன் (த. அ. க.)

**வவுனியா – 86**
எக்ஸ். எம். செல்லதம்பு (த. அ. க.)

**திருகோணமலை – 87**
பி. நேமிநாதன் (த. அ. க.)

**மூதூர் – 88**
[2 அங்கத்தவர் தொகுதி]
ஏ. எல். அப்துல் மஜீத் (ஸ்ரீ. ல. சு. க.)
ஏ. தங்கத்துரை (த. அ. க.)

**கல்குடா – 89**
கே. டபிள்யூ. தேவநாயகம் (ஐ. தே. க.)

**மட்டக்களப்பு – 90**
[2 அங்கத்தவர் தொகுதி]
செ. இராஜதுரை [த. அ. க.]
பி. ஆர். செல்வநாயகம் [சுயேச்சை]

**அம்பாறை – 91**
எஸ். சோமரட்ன (ஸ்ரீ. ல. சு. க.)

**பட்டிருப்பு – 92**
எஸ். தம்பிராஜா (ஐ. தே. க.)

**கல்முனை – 93**
எம். சி. அகமது (ஸ்ரீ. ல. சு. க.)

**நிந்தவூர் – 94**
எம். எம். முஸ்தபா (ஐ. தே. க.)

**பொத்துவில் – 95**
எம். ஏ. அப்துல் மஜீத் (ஐ. தே. க.)

**புத்தளம் – 96**
எஸ். எம். அசன் குத்தாஸ் (ஸ்ரீ. ல. சு. க.)

**நிக்கவரட்டியா – 97**
எம். தென்னக்கோன் (சு)

**யாப்பஹுவா – 98**
ரீ. ஆர். பலல்ல (ஸ்ரீ. ல. சு. க.)

**ஹிரியால – 99**
எஸ். பி. ஹேரத் (ஐ. தே. க.)

**வாரியப்பொல – 100**
எம். ஏ. ஜே. விஜேசிங்கா (ஸ்ரீ. ல. சு. க.)

**பிங்கிரியா – 101**
எல். பி. ஜயசேன (ஸ்ரீ. ல. சு. க.)

**சிலாபம் – 102**
எஸ். டி. ஆர். ஜயரட்ன (ஸ்ரீ. ல. சு. க.)

**நாத்தாண்டிய – 103**
பி. திஸ்சேரா (ஸ்ரீ. ல. சு. க.)

**வென்னப்புவ 104**
ஏ. பொன்சேகா (ஸ்ரீ. ல. சு. க.)

**கட்டுகம்பளை – 105**
ரி. பி. சுபசிங்கா (ஸ்ரீ. ல. சு. க.)

**குளியாப்பிட்டி – 106**
ஜீ. டபிள்யூ. சமரசிங்கா (ஸ்ரீ. ல. சு. க.)

**தம்பதெனியா – 107**
பி. பி. வெத்தேவ (ஸ்ரீ. ல. சு. க.)

**பொல்காவலை – 108**
எம். ஹேரத் (ஸ்ரீ. ல. சு. க.)

**குருநாகல் – 109**
பி. விஜேசிங்க (ஸ்ரீ. ல. சு. க.)

**மாகவத்தகம – 110**
டி. பி. விக்கிரமசிங்கா (ஸ்ரீ. ல. சு. க.)

**தொடங்கஸ்லந்தை – 111**
எஸ். விஜேவர்த்தன (ஸ்ரீ. ல. சு. க.)

**அனுராதபுரம் – 112**
கே. பி. இரத்நாயக்கா (ஸ்ரீ. ல. சு. க.)

**மதவாச்சி – 113**
மைத்திரிபால சேனநாயக்கா (ஸ்ரீ. ல. சு. க.)

**ஹொரவப் பொத்தானை – 114**
கே. பி. ஹேரத் (ஸ்ரீ. ல. சு. க.)

**மிகுந்தலை – 115**
பி. தென்னக்கோன் (ஸ்ரீ. ல. சு. க.)

**கலாவெவ – 116**
ஆர். பி. இரத்னமலல (ஸ்ரீ. ல. சு. க.)

**கெக்கிராவ – 117**
ஏ. எம். ஜினதாச (ஸ்ரீ. ல. சு. க.)

**மின்னேரியா – 118**
ஆர். டி. சேனநாயக்கா (ஸ்ரீ. ல. சு. க.)

**பொலநறுவை – 119**
கே. ஏ. எல். விஜேசிங்கா (ஸ்ரீ. ல. சு. க.)

**மஹியங்கனை – 120**
எட்வின் விக்ரமரத்ன (ஸ்ரீ. ல. சு. க.)

**பிபிலை – 121**
எம். ஜே. அத்த நாயக்க (ஸ்ரீ. ல. சு. க.)

**பசறை – 122**
எஸ். சோமபால (ஸ்ரீ. ல. சு. க.)

**பதுளை – 123**
பி. எச். பண்டார (ஸ்ரீ. ல. சு. க.)

**சொர்ணதோட்டை – 124**
கே. வை. எம். விஜேரத்னபண்டா (ஸ்ரீ. ல. சு. க.)

**ஊவாக – பரணகம – 125**
எஸ். பி. தெலுங்கதாவத்த (ஸ்ரீ. ல. சு. க.)

**வெலிமடை – 126**
போட்டியின்றிதெரிவு
திரு. ஆர். எம். பண்டார (ஸ்ரீ. ல. சு. க.) போட்டியின்றி தெரிவு.

**பண்டாரவளை – 127**
ஆர். எம். அப்புஹாமி (ஸ்ரீ. ல. சு. க.)

**அப்புத்தளை – 128**
டபிள்யூ. பி. ஜி. ஆரியதாச (ஸ்ரீ. ல. சு. க.)

**மொனராகலை – 129**
ராஜா வெலேகம (ஸ்ரீ. ல. சு. க.)

**டெடிகம – 130**
டட்லி சேனநாயக்கா (ஐ. தே. க.)

**கலிகமுவ – 131**
பி. பி. பாலசூரியா (ஸ்ரீ. ல. சு. க.)

(4ம் பக்கம் பார்க்க)


## நவீன முறை சிறிய கை மெசின்

இலவசம்! எம்பிராய்டரி கத்தரி ஒன்று, எம்பிராய்டரி புத்தகம் ஒன்று, வளையல் ஒரு சோடி, அல்லது புதிய மோஸ்தர் காதணி இலவசம். பெண்மணிகளே! இதோ எம்பிராய்டரி பூக்கள் தைப்பதற்கு எம்பிராய்டரி தை மெசின் ஒன்று. இந்த மெசின் மூலம் எந்தவிதமான துணியிலும் மிருகங்கள், பறவைகள், எழுத்துக்கள் பூக்கள் ஆகிய மோஸ்தர்களை மிகவும் அழகாகவும், தெளிவாகவும் தைத்துக் கொள்ள முடியும். இதன் விலை ரூபாய் 3-50. இந்த மெசினுடன் மேற்குறிப்பிட்ட பரிசுகள் இலவசமாக கொடுக்கப்படும்.

வி. பி. பி. மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

நீங்களும் தாமதமின்றி இன்றே எழுதுங்கள்!

*Manager*
**SEWING DEPARTMENT (TH)**
Central Suppliers. Dehiwala.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 11 மந்திரிகள் 6 உதவி மந்திரிகள் சரிவு; தமிழரசுத் தலைவர், செயலாளர் தோல்வி ஜீ. ஜீ., உடுப்பிட்டி சிவா,– வெற்றியில்லை

# திருமலையில் ஆரம்பம் மட்டுநகரில் முடிவு

கொழும்பு, மே, 29

இலங்கையின் ஏழாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் பெறுபேறுகள் திருமலையில் ஆரம்பித்து, மட்டுநகரில் போய் முடிந்தன.

முதலாவது தேர்தல் முடிவு நேற்று நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னர் திருகோணமலையில் இருந்து கிடைக்கப் பெற்றது. மட்டுநகர் முடிவு நேற்று மாலை 6 மணிக்குப் பின்னால் கிடைத்தது.

இந்தப் பொதுத் தேர்தல், திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவின் தலைமையிலான ஸ்ரீ. ல. சு. கட்சிக்கு பல பெருமைகளை ஈட்டிக் கொடுத்துள்ளது.

இந்தத் தேர்தலில் குறிப்பிடக் கூடிய முக்கிய அம்சங்கள் வருமாறு:–

★ தேசிய அரசாங்கத்தின் 11 அமைச்சர்களும், 6 உதவி அமைச்சர்களும் படு தோல்வி அடைந்தார்கள்.

★ தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கமும், மேற்படி கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கமும், கட்சியின் முக்கிய பிரமுகர் திரு. ஈ. எம். வி. நாகநாதனும் தோல்வி அடைந்தார்கள்.

★ தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மூன்றாவதாக வந்து தோல்வியைத் தழுவிக் கொண்டார். மேற்படி கட்சிப் பொதுச் செயலாளர் திரு. மு. சிவசிதம்பரமும் தோல்வி அடைந்தார்.

★ முன்னாள் சபாநாயகர் திரு. ஷேர்லி கொரியாவும், உப சபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரமும் தோற்கடிக்கப்பட்டார்கள்.

★ தேர்தலில் போட்டியிட்ட 14 பெண்களில் 5 பேர் வெற்றியீட்டியுள்ளனர். இவர்கள் பெயர் வருமாறு— திருமதிகள் விவியன் குணவர்த்தன, தாமரகுமாரி இலங்கரத்தின, மல்லிகா ரத்வத்தை, சிவா, ஒபயசேகரா, குசலா, அபயகுணவர்தன.

★ ஐக்கிய தேசியக் கட்சி தனது 49 பழைய ஸ்தானங்களை இழந்து 2 புதிய ஸ்தானங்களை மட்டுமே கைப்பற்றியது.

★ தேர்தலில் போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளர்களில் இருவர் மட்டுமே வெற்றி பெற்றனர். அவர்களில் ஒருவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்.

★ சிங்கள மக்கள் கட்சியின் தலைவர் திருமலை, தம்பதெனியா தொகுதிகளில் போட்டியிட்டு இரு இடங்களிலும் தோல்வி அடைந்தார். திருமலையில் கட்டுப் பணத்தை இழந்தார்.

★ சிங்கள மகாஜனக் கட்சியின் ஏனைய வேட்பாளர்கள் அனைவரும் தமது கட்டுப் பணத்தை இழந்து தோல்வியுற்றனர்.

★ ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பழைய அங்கத்தவர் அனைவரும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

★ லங்கா சமசமாஜக் கட்சி புதிதாக 8 ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது.

★ கம்பஹா தொகுதியில் போட்டியிட்ட எஸ். டி. பண்டார நாயக்கா தோல்வி அடைந்தார்.

★ புதிதாக 8 பேர் தமிழ்ப் பகுதி எம். பீ.க்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பெயர் விபரம் வருமாறு— திருவாளர்கள் சி. எக்ஸ். மார்ட்டின், கே. ஜெயக்கொடி, வி. ஆனந்தசங்கரி, பி. நேமிநாதன், எக்ஸ். எஸ். செல்லத்தம்பு, ஆ. தியாகராசா, ஆ. தங்கத்துரை, எஸ் வி. தம்பிராஜா.

★ தமிழரசுக் கட்சி தனது பழைய 4 தொகுதிகளை இழந்து 3 புதிய தொகுதிகளில் வெற்றியீட்டியுள்ளது.

★ தமிழ்க் காங்கிரஸ் பழைய மூன்று தொகுதிகளையும் இழந்து புதிய மூன்று தொகுதிகளையும் கைப்பற்றி உள்ளது.

★ சுயாட்சிக் கழகம் இ. தி. மு. க., ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணிக் கழக சார்பில் போட்டியிட்ட சகல வேட்பாளர்களும் தோல்வியுற்றனர். இவர்களில் அநேகமானோர் கட்டுப் பணத்தை இழந்தனர்.

★ தமிழ்ப் பகுதிகளில் மூவர் ஆகக் குறைந்த அதிகப்படி வாக்குகளைப் பெற்று எம். பீ.க்களானார்கள். அதன் விபரம் — திரு. சி. சி. எக்ஸ். மார்ட்டின் (யாழ்ப்பாணம்) — 56. திரு. வி. ஏ. அழகக்கோன் (மன்னார்) — 69, முஸ்தபா (நிந்தவூர்) — 75.

★ அகில இலங்கையிலும் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியவர் கூட்டணித் தலைவி திருமதி பண்டார நாயக்காவே ஆவார்.

★ திரு. டட்லி சேனநாயக்கா பெற்ற அதிகப்படியான வாக்குகள் 1087 ஆகும்.

★ வட பகுதியில் போட்டியிட்ட இரண்டு ஸ்ரீ லங்கா, சுதந்திரக் கட்சி வேட்பாளர்களும், மற்றும் இடதுசாரிக் கட்சி வேட்பாளர்கள் அனைவரும் தோல்வியுற்றனர். (ண)

## மிக அமைதியான முறையில் தேர்தல்

கொழும்பு, மே. 29

நாடுபூராவும் பொதுத் தேர்தல் அமைதியாக நடந்தேறியதையிட்டு அரசியல்கட்சித் தலைவர்கள் எல்லோரும் திருப்தி அடைந்துள்ளனர். மக்கள் மிகவும் பொறுப்புணர்ச்சியுடனும், பொறுமையாகவும் நடந்துள்ளதே இத் தேர்தலின் சிறப்பு அம்சமாகும் எனப் பொலீஸாரும் தெரிவித்தனர்.

வாக்களிப்பு முடிந்து வாக்குச் சீட்டுப் பெட்டிகள் கொண்டு செல்லப்பட்டபின், வாக்காளர்கள் ஆங்காங்கு கூடிநின்று தேர்தல் பெறுபேறுகள்பற்றி ஆராய்ந்தனர்.

தேர்தல் முடிவுகளை அறியும் முகமாக நாட்டு மாநகர மக்கள் விடியவிடிய வானொலிகளை முடுக்கி விட்டுக் கண்விழித்திருந்தனர். ஒவ்வொரு தேர்தல் முடிவும் வெளிவந்தவுடன் ஆதரவாளர்கள் "பட்டாசு" கொளுத்திக்கொண்டனர்.

1970–ம் ஆண்டுத் தேர்தலின் முதலாவது முடிவை வெளியிட்ட பெருமை திருகோணமலைத் தொகுதிக்குக் கிட்டியது.

அதையடுத்து, வெளிவந்த ஒலிபரப்புகளில் அடுத்தடுத்து அமைச்சர்களின் "தலைகள் உருளத்" தொடங்கவே தேர்தல் முடிவுகளில் புதிய திருப்பம் ஏற்படத் தொடங்கியது. அரசியல் மாற்றம் காணத்துடித்த கட்சி ஆதரவாளர்கள் விடியவிடிய வெற்றிவிழா கொண்டாடினர்.

## ஆள்மாறாட்டம்

கொழும்பு, மே. 29

கொழும்பு தெற்குத் தொகுதியில் உள்ள ஒரு வாக்களிப்பு நிலையத்தில் ஆள்மாறாட்டம் செய்து வாக்களிக்க முயன்ற சம்பவம் ஒன்று நடைபெற்றது.

அழகிய இளம்பெண் ஒருத்தி இரண்டாவது முறையாக வாக்கு அளிக்க முயன்றாராம். இவருக்கு இரண்டாவது வாக்குச் சீட்டு அளிக்கப்படுவதற்கு முன்னதாக வேட்பாளரின் பிரதிநிதி ஆட்சேபம் கிளப்பினார்.

சுகவீனமுற்று இருக்கும் தமது சகோதரிக்குப் பதிலாகவே தாம் வாக்களிக்க வந்ததாக அந்த இளம்பெண் கூறியதாகவும் தெரிகிறது. (ண)

## புதிய எம். பிக..

கேகாலை – 132
பி. பி. ஜி. கலுகல்லே (ஸ்ரீ. ல. சு. க.)

றம்புக்கனை – 133
ஆனந்த சிறிசேன (ஸ்ரீ. ல. சு. க.)

மாவனல்ல – 134
பி. ஆர். இரத்னயக்கா (ஸ்ரீ. ல. சு. க.)

எட்டியாந்தோட்டை – 135
என். எம். பெரேரா (ல. ச. ச. க.)

ருவான்வெல – 136
எஸ். அத்தவுடா (ல. ச. ச. க.)

தெஹியோவிற்ற – 137
டி. வீரசேகரா (ல. ச. ச. க.)

கிரியெல்ல – 138
டப்ளியூ. நாணயக்கார (ல. ச. ச. க.)

இரத்தினபுரி – 139
நந்தா எல்லாவெல (ஸ்ரீ. ல. சு. க.)

பெல்மதுளை – 140
டி. வன்னியாராச்சி (ஸ்ரீ. ல. சு. க.)

பலாங்கொடை – 141
மல்லிகா ரத்வத்தை (ஸ்ரீ. ல. சு. க.)

இறக்குவானை – 142
வி. ரீ. ஜீ. கருணாரத்ன (ஸ்ரீ. ல. சு. க.)

நிவித்திகலை – 143
பி. ஹரிச்சந்திரா (ஸ்ரீ. ல. சு. க.)

கலவானே – 144
எஸ். முத்தெட்டுவேகம (க. க)

கொலன்னே – 145
(ல. ச. ச. க)

கோபால் பல்பொடி




பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.

**S. P. S. ஜெயம் அன் கோ.**

மதுரை – கொழும்பு.

விற்குமிடம்:–

34, செட்டியார் தெரு, கொழும்பு – 11.

தபால் பெட்டி: 1298.

தொலைபேசி எண்: 26584



குறைந்த விலைக்கு ஒரு ரேடியோ

பயிற்சியாளர்களே! ஜப்பானின் சிறந்த ரேடியோ நிபுணரினால் எழுதப்பட்ட ரேடியோ தயாரிப்பை இலகுவாகக் கற்றுக்கொள்ளக் கூடிய ரேடியோ கைப் புத்தகம் வெளிவந்துவிட்டது. ரேடியோ, டிரான்ஸிஸ்டராக மாற்றுமலே ஒரு துண்டு உருக்கினால் கொய்லை சுற்றி 6 டோர்ச் பாட்டரிகளினால் H.T. 90 L.T. 1.5. தயாரித்து இயங்கச் செய்வது, பாட்டரி தயாரிப்பு, டிரான்ஸிஸ்டர் செய்வது, இயர்போன் முதல் பெரிய ஒலி பெருக்கி ரேடியோ வரை செய்யும் முறைகள் 10 பாடங்களினால் கற்பிக்கும் புத்தகம் ரூ. 4-00. தபாலுக்கு 75 சதம். அத்துடன் பாட்டரியில்லாமல் கேட்கும் சர்கிட் இரண்டு இலவசம். ஒரு சில குறிப்பிட்ட தொகை மாத்திரமே கையிருப்பில் உண்டு. இன்றே கேளுங்கள்.

Director, (Technical Dept.) (TH)
Central Suppliers, Dehiwala.

இப் பத்திரிகையை அச்சிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு — 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 29 மே 1970
Thanthi 5, Gunasena Mawatha, Colombo-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org